[1969 செப்டம்பர் 11]

அமைக்க வேண்டுமென்று விரும்பினாலும்கூடப் பல்கலைக் கழகத்தின் அனுமதிபெற்று உதவிக்காக அரசாங்கத்தை அணுகினால் முறைப்படி கவனிக்கப்படும். இப்போது உள்ள 14 தமிழ்க் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்களே தமிழகத்தின் தேவைக்குப் போதுமானது. மேலும் தமிழ்க் கல்லூரிகளை இப்போது ஆரம்பித்தால் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் வேலையில்லாத் திண்டாட்டந்தான் ஏற்படும்.

### துவக்கப் பள்ளிகள்

*195 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

துவக்கப்பள்ளிகளுக்குரிய பாடப் புத்தகக் குழுவில் துவக்கப் பள்ளி ஆசிரியர்களும் இடம் பெறச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தொடக்கநிலைப் பள்ளிகளுக்கென்றே தனிப்பட்ட பாடப்புத்தகக் குழு எதுவும் இல்லை. தொடக்க நிலைப்பள்ளிகளையும் சேர்த்து ஏற்பளிக்கப் பட்ட பள்ளிகள் அனைத்தின் தேவையையும் இப்பொழுது இருக்கும் பாடப்புத்தகக் குழு நிறைவு செய்கிறது. தொடக்க நிலைப் பள்ளி களுக்கென்றே தனிப்பட்ட பாடப்புத்தகக் குழு இல்லாததால், இவ் வினா எழவில்லை.

*196 வினா.—திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளுக்குப் பாடத்திட்டம் வகுப்பது யார்?

(இ) தற்போதுள்ள பாடத் திட்டம் ஆரம்பப்பள்ளி மாணவர் களின் அறிவுக்கு அப்பாற்பட்டு உள்ளதால் அதனைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) அவ்வப் பொழுது அமைக்கப்படும் தகுதியான குழுக்களால் வகுக்கப்பட்டு சர்க்கார் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

(இ) மாறுதலைக் கோரி எவ்வித முறையீடுகளும் கிடைக்கப் பெறவில்லை. அதனால் இக்கேள்விக்கு இடமில்லை.

*197 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடிக்கடி பள்ளிகளில் பாடத்திட்ட முறைகளை மாற்றம் செய்வதால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?